(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.155/2026**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.1 (LW.1 )

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பண்ணன் |
| Father's/Husband Name | : | தங்கவேல் |
| Village | : | எலச்சிபாளையம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்துவருகிறேன் |
| Age | : | 65 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **24.06.2026.**

**முதல் விசாரணை:–**

1) விபத்தில் காயம்பட்ட சித்ரா எனது மனைவி ஆவார். கடந்த 20.12.2025–ம் தேதி இரவு 9.00 மணியளவில் எனது மனைவி டிபன் வாங்குவதற்காக ராசிபுரம் to திருச்செங்கோடு செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடக்க முயன்றபோது ராசிபுரம் பக்கமிருந்து வந்த எலக்ட்ரிக் பைக் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் என்னிடம் வந்து தகவல் கூறினார்கள். தகவல் கேள்விப்பட்டு நான் சம்பவ இடம் சென்று அவரை ஆம்புலன்ஸ் மூலம் விவேகானந்தா மருத்துவமனை அழைத்துச்சென்று அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன்.

பின்னர் நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

விபத்து குறித்து தகவல் கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**:- இல்லை

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.24 20:45:30 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.155/2026**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.2 (LW.2 )

| | | |
|---|---|---|
| Name | : | சித்ரா |
| Husband Name | : | கருப்பண்ணன் |
| Village | : | எலச்சிபாளையம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | இல்லத்தரசி |
| Age | : | 61 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **24.06.2026.**

**முதல் விசாரணை:–**

1) கடந்த 20.12.2025–ம் தேதி இரவு 9.00 மணியளவில் நான் டிபன் வாங்குவதற்காக ராசிபுரம் to திருச்செங்கோடு செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடக்க முயன்றபோது ராசிபுரம் பக்கமிருந்து வந்த எலக்ட்ரிக் பைக் வேகமாக வந்து என் மீது மோதிவிட்டார். நான் சுழன்று கீழே விழுந்துவிட்டேன். எனக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் விவேகானந்தா மருத்துவமனை அழைத்துச்சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். இந்த விபத்திற்கு காரணம் எலக்ட்ரிக் பைக் ஓட்டுநர் தான். அவரை பார்த்தால் அடையாளம் தெரியும். அவர்

இருசக்கர வாகனத்தின் மட்கார்டு முன்பு இரும்பு ஆங்கில்கள் வைத்திருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:–

விபத்து நடந்தது இரவு 10.00 மணி இருக்கும் என்றால் சரியல்ல. 9 மணி இருக்கும். நான் எனது வீட்டிலிருந்து ரோட்டை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கடந்தபோது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் நான் சாலையை கவனிக்காமல் திடீரென சாலையை குறுக்காக கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.24 20:45:37 +0530